# ஆசிரியரின் வினையாற்றுகையும் பாடசாலைச் சமூக பங்கேற்பும்


**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய கல்வியின் எதிர்பார்ப்புக்கள் நிறைவு செய்யப்பட்ட மாணவர்களாக பிள்ளைகளைப் பாடசா லையிலிருந்து வெளியேற்றுவதில் முக்கியமாக செல்வாக்குச் செலுத்தும் விடயமாக பாடசாலை சமூக பங்கேற்பு காணப்படுகின்றமை யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். ஆனால் நிலைப்பாட்டில் அவ்வாறான நிலைமை கேள்விக்குரியதாகவே காணப்படுவதனால் வலிகாமம் கல்விவலயத்தை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியா்களின் வகுப்பறைச் செயற்பாட்டின் வினையாற்றலில் பெற்றார், அயற்சமூக பாடசாலைப் பங்கேற்பு என்ற விடயம். ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்டது இந்த ஆய்விற்காக வகுப்பாசிரியர்களின் மாதிரிப்பருமனானது கிரெஜ்ஜிமோர்கனின் அட்டவணையின் பிரகாரமும், மற்றும் பாடசாலை வகை விகிதாசார அடிப்படையிலும் படைகொண்ட எழுமாற்று முறையில் மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன. அத்தோடு கருவியின் நம்பகம், தரவுகளின் நம்பகமானது, Cronbach’s Alpha சோதனையைப் பயன்படுத்தி SPSS 16 கணினி மென் பகுபொருள் பயன்படுத்தப்பட்டுத் துணியப்பட்டுள்ளது. வினாக்கொத்துக்களுக்கூடாகப் பெறப்பட்ட தகவல் களானவை சதவீதம் காணல், கைவர்க்கச் சோதனை மூலம் தொடர்புடைமைகள் காணல் மற்றும் Regression பகுப்பாய்வின் மூலமும் தொடர்புடைமைகள் காணப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. வலிகாம கல்வி வலய பாடசாலைகளைப் பொறுத்தவரையில் 75மூற்கு மேற்பட்ட ஆசிரிய பெற்றோர் இடைவினை உறவை 63% ஆன ஆசிரியர்கள் கொண்டுள்ளனர். அதேவேளை ஆசிரியர் அயற் சமூக உறவு பலவீனமான நிலையில் காணப்படுகின் றது. 1AB பாடசாலை, பருமன் கூடிய பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சூழலைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஏனைய ஆசிரியர்களை விட ஒப்பீட்டு ரீதியில் ஆசிரியர் - பெற்றோர் இடைவினை உறவைக் கூடுதலாகக் கொண்டுள்ளனர். பெற்றாரின் பாடசாலைப் பங்கேற்பு திருப்தியான நிலைமை 10.7மூ ஆகவே காணப்படுகின்றது. ஆசிரியர் - பெற்றார் இடைவினை உறவு தேர்ச்சி நிலைமையில் உள்ள சந்தர்ப்பத்தில் கூட பெற்றோரின் பங்களிப்பின் திருப்திகரமானது : திருப்திகரமற்றது 1 : 6 ஆகவே காணப்படுகின்றது. ஆசிரி யா்களின் வகுப்பறைச் செயற்பாட்டின் வினைத்திறனானது திட்டமிடல், அமுலாக்கம் தொடா்பாக அளவிடப்பட்டபோது திட்டமிடலின் திருப்தியான நிலைமை 57.4 வீதமாகும். வகுப்பறைச்செயற்பாட்டின் அமுலாக்கத்தின் திருப்தியான நிலைமை 40.9 வீதமாகும். ஆசிரியா்- அயற்சமூக இடைவினை உறவிற்கும் அயற்சமூகப் பங்களிப்பிற்குமான தொடர்புடைமையின் $\beta$=0.444ஆகவும் காணப்படுகிறது. மேலும் பெற்றாரின் பாடசாலைப் பங்கேற்பிற்கும் ஆசிரியா்களின் வகுப்பறைச் செயற்பாட்டின் திட்டமிடல், அமுலாக்கம் என்பவற்றிற்குமிடையே நேர்க் கணியத்தொடர்பு காணப்படுகிறது. இங்கு முறையே 0.382, 0.625. ஆகும்.



**திறவுச் சொற்கள்** - ஆசிரியரின் வினையாற்றுகை, பாடசாலைச் சமூகம், பாடசாலைப் பங்கேற்பு